மேலூர் பகுதியில் ‘டங்ஸ்டன்’ சுரங்கப் பணிகள்: ஒன்றிய அரசின் சுரங்கத் துறை அமைச்சருக்கு - 2023 ஆம் ஆண்டிலேயே

# தமிழ்நாடு அரசின் எதிர்ப்பினை தெளிவாகத் தெரிவித்தேன்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

**சென்னை, டிச.1–**

**மேலூர் பகுதியில் உள்ள கிராமங்களில், டங்ஸ்டன் சுரங்கப் பணிகளை மேற்கொள்ள எதிர்ப்பு தெரிவித்து 3.10.2023 நாளன்று, ஒன்றிய சுரங்கத் துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், தமிழ்நாடு அரசின் எதிர்ப்பினை தெளிவாகத் தெரிவித்தேன்.**

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் உள்ள கிராமங்களில், டங்ஸ்டன் சுரங்கப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஹிந்துஸ்தான் சிங்க் நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு உரிமம் அளித்துள்ளது. இந்த கிராமங்களில் வாழக்கூடிய விவசாயிகளின் வாழ்வாதரம் இந்த சுரங்கப் பணிகளால் பாதிக்கப்படும் என்பதால், இந்தப் பகுதி மக்கள் இதை எதிர்த்து போராட்டங்களை மேற்கொண்டனர்.



இந்த நிலையில், மேலூர் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய எந்த சுரங்கப் பணிகளுக்கும் தமிழ்நாடு அரசு எப்போதும் அனுமதி அளிக்காது என்று உறுதியளித்து, இந்துஸ்தான் சிங்க் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட சுரங்க உரிமத்தை இரத்து செய்ய வேண்டும் என்று பிரதமர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். இதனை ஏற்று, போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அப்பகுதி மக்களும் தமது போராட்டத்தை விலக்கிக் கொண்டுள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் இந்த உறுதியான நடவடிக்கையை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதை சகிக்க முடியாத சிலர், ஒன்றிய அரசின் இந்த சுரங்க உரிமத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்ததாக, விஷமத்தனமான வதந்திகளை பரப்பி வருகின்றனர். மேலும், இந்த உரிமத்தை வழங்குவதற்கு முன்பாக மாநில அரசின் கருத்துக்களைப் பெற்றதாக ஒன்றிய அரசும் தவறான தகவலை தெரிவித்துள்ளது. இது குறித்த உண்மை நிலையை விளக்கிட விரும்புகின்றேன்.

கடந்த 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், முக்கிய கனிமவளங்களை ஏலம் விடுவது தொடர்பாக கனிமக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை ஒன்றிய அரசு தெரிவித்த உடனேயே, 3.10.2023 நாளன்று, ஒன்றிய சுரங்கத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில், தமிழ்நாடு அரசின் எதிர்ப்பினை தெளிவாக தெரிவித்தேன். ஆனால், 2.11.2023 அன்று ஒன்றிய சுரங்கத்துறை அமைச்சர் அவர்கள் இதற்கு அளித்த பதிலில், உரிய சட்டத் திருத்தங்களை மேற்கொண்ட பிறகே இந்த ஏலம் விடப்படுவதாகவும், தேசிய அளவிலான தேவைகளை கருத்தில் கொண்டு மாநில அரசுகள் இந்த கொள்கைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு நமது எதிர்ப்புகளை நிராகரித்தார்.

இதனைத் தொடர்ந்து மதுரை மேலூர் பகுதியில் உள்ள நிலங்களைப் பற்றிய விவரங்கள் ஒன்றிய அரசால் கேட்கப்பட்ட போதும், உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள அரிட்டாபட்டி பகுதியானது ஒரு பல்லுயிர் பெருக்க வரலாற்றுத் தலம் என்பதை சுட்டிக்காட்டினோம். இவை எவற்றையுமே கருத்தில் கொள்ளாத ஒன்றிய அரசு ஏலம் விட்டு டங்ஸ்டன் உரிமத்தை மேற்கூறிய நிறுவனத்திற்கு அளித்தது.

இன்று மக்களுடைய எதிர்ப்பையும் முதலமைச்சர் அவர்களின் உறுதியான நிலைப்பாட்டினையும் கண்டு மிரண்டு, ஒன்றிய அரசும், அதனோடு சேர்ந்து இரட்டை வேடம் போடக்கூடிய எதிர்க்கட்சிகளும், மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக இந்த சுரங்க ஏலத்துக்கு தமிழ்நாடு அரசு தனது ஒப்புதலை தெரிவித்ததாக பொய்ச் செய்திகளை பரப்பி வருகின்றன. இவை எதையும் மக்கள் நம்பத் தயாராக இல்லை என்பதே உண்மை.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அவரது பிறந்த நாளில், வேளச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எம்.எச்.ஹசன் மௌலானா சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.அருண் பெங்களூருவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது, “பெங்களூரு கன்டோன்மென்ட் பகுதியில், ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது, தமிழர்கள் அவர்களுக்கு அடிமையாக இருந்தனர். ஆனால் கன்னடர்கள் ஒருபோதும் அடிமைகளாக இருந்ததில்லை. இங்கு வாழும் அனைவரும் கன்னடம் கற்றுக்கொண்டு கன்னடத்தில் பேச வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; நீதிபதியின் இந்த இன மொழி வெறிப் பேச்சு அங்கே பெரும் சர்ச்சையையும், கண்டனத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது.**

**நீதிபதிகள் சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவர்களாகவும், எதையும், எந்த சந்தர்ப்பத்திலும் நடுநிலை தவறாது சிந்தித்துச் செயலாற்றக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.**

**இன மொழி வெறுப்புச் சிந்தனை உள்ளவர் நீதிபதியாக இருக்க முடியாது. அப்படிப்பட்டவரை, ‘நீதிபதி’ என்றல்ல; முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சொற்களில், நீதி ‘பாதி’ என்றுதான் அழைக்க நேரிடும் !**



ஃபெஞ்சல் புயல் காரணமாக கனமழை பெய்து வரும் நிலையில் செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், வாயலூர் கிராமத்தில் சமுதாய நலக்கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இருளர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று சந்தித்து அவர்களுக்கு மதிய உணவு வழங்கினார். அருகில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராகுல் நாத், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.டி.அரசு ஆகியோர் உள்ளனர்.





